# யாழ். கீரிமலை ஜனாதிபதி மாளிகை அமைந்துள்ள பகுதி அளவீட்டுப்பணி மக்களின் எதிர்ப்பால் கைவிடப்பட்டது!



## பொலிசாரும் புலனாய்வுப் பிரிவினரும் குவிப்பு



யாழ்ப்பாணம் - கீரிமலை ஜனாதிபதி மாளிகை அமைந்துள்ள பகுதியை நகர அபிவிருத்தி நடவடிக்கைக்காக சுவீகரிக்கும் அடிப்படையில் அளவீடுகள் செய்வதற்கு நில அளவைத்திணைக்கள அதிகாரிகள் இன்று காலை 10 மணியளவில் வருகை தந்திருந்தனர்.

இதன்போது குறித்த காணி அளவீட்டுக்கு காணி உரிமையாளர்கள் மற்றும் பொதுமக்கள் எதிர்ப்பை வெளியிட்டதுடன் நில அளவைத்திணைக்களத்தின் வாகனத்தினையும் 2 ➤


# மாலைக்கதிர்

Maalaikkathir





சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2055 பங்குனி 13 செவ்வாய்க்கிழமை 26.03.2024 கதிர் 212

## பெரிய வெங்காய ஏற்றுமதித் தடை நீடிப்பு இலங்கையில் அதன் விலையில் அதிகரிப்பு

பெரிய வெங்காய ஏற்றுமதி மீதான தடையை மேலும் நீடிப்பதற்கு இந்திய அரசு முடிவு செய்துள்ளது.

கடந்த டிசம்பர் மாதம் பெரிய வெங்காய ஏற்றுமதிக்கு இந்தியா விதித்திருந்த தடை இம்மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடைவதாக இருந்த நிலையிலேயே அந்த தடையை மேலும் நீடிப்பதாக இந்திய அரசாங்கம் அறிவித்துள்ளது.

விலை அதிகரிப்பை கட்டுப்படுத்தவும், இந்திய சந்தையில் அதிக அளவில் பெரிய வெங்காய இருப்பை தக்க வைக்கும் நோக்கிலுமே இந்திய அரசாங்கம் அந்த முடிவை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

உலக அளவில் பெரிய வெங்காய ஏற்றுமதியில் இந்தியா முன்னணியில் உள்ளதுடன், இலங்கையும் பிரதானமாக இந்தியாவிலிருந்து பெருமளவு பெரிய வெங்காயத்தை இறக்குமதி செய்யும் நாடாக இருந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

பெரிய வெங்காய ஏற்றுமதிக்கு இந்தியா தடை விதித்ததையடுத்து, இலங்கையில் உள்ளூர் சந்தையில் ஒரு கிலோ பெரிய வெங்காயத்தின் விலை 800 ரூபாவாக அதிகரித்துள்ளது.

இந்தத் தடை நீடிப்பின் காரணமாக, எதிர்வரும் பண்டிகைக் காலத்தை முன்னிட்டு தாம் மீண்டும் பல பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளதாக பெரிய 2 ➤

## அனைத்து அரச ஊழியர்களுக்கும் சம்பளத்தில் அதிகரித்த ரூ 10,000 ஏப்ரல் முதல் வழங்கப்படும்

### நிதி அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தகவல்



அனைத்து அரசு ஊழியர்களுக்கும் மார்ச் மாத சம்பளம் வழங்கப்பட்ட பின்னர், ஏப்ரல் மாத சம்பளமும் அதே மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும், வரவு செலவு திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, அரச ஊழியர்களுக்கு அறிவிக்கப்பட்ட ரூ.10,000 சம்பள அதிகரிப்பு, ஏப்ரல் மாதத்திலிருந்து சம்பளத்துடன் சேர்க்கப்படும் எனவும் நிதி அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

இது குறித்து நேற்று (25) ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்து தெரிவித்த அவர், 'குறைந்த வருமானம் பெறும் 28 இலட்சம் குடும்பங்களுக்கு ஏப்ரல் மாதத்தில் தலா 10 கிலோ அரிசியும், மேலும் 10 கிலோ அரிசி மே மாதத்திலும் வழங்கப்படும்' என்றார்.

குறைந்த வருமானம் பெறுவோருக்கு நிவாரணம் வழங்கும் நோக்கில், நெல்லுக்கு வழங்கப்படும் 2 ➤

## ரணிலை விரட்டுவதற்காகவே கோத்தபாயவை கொண்டு வந்தோம் அவரோ அதே ரணிலிடம் நாட்டை ஒப்படைத்தமை வரலாற்றுத் துரோகம்!

### இரண்டு அமெரிக்கர்களின் பிடியில் கோத்தபாய இருந்தார் என்கிறார் கம்மன்பில



ரணிலை விரட்டுவதற்காகவே 69 லட்சம் மக்கள் கோத்தபாயவுக்கு வாக்களித்தனர். நாங்கள் விரட்டியடித்த அதே ரணிலிடம் அரசாங்கத்தின் தலைமைப் பொறுப்பை ஒப்படைத்தமை போன்ற ஒரு துரோகம்! இலங்கை வரலாற்றில் இதற்கு முன்னர் இது போல நடந்ததில்லை, என பிவித்துரு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

உத்தர லங்கா சபையினால் மஹரகம இளைஞர் சேவை மன்ற மண்டபத்தில் நடத்தப்பட்ட மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக் 2 ➤

## கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் “யுக்திய” விழிப்புணர்வு முன்னெடுப்பு!



இலங்கை பொலிஸ் திணைக்களத்தினால் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டுவரும் “யுக்திய” நடவடிக்கை இன்று காலை முதல் கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்ட பல இடங்களில் மேற்கொள்ளப்பட்டது.

கோப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஏ.பி. வெதகெதர மற்றும் கோப்பாய் பொலிஸ் நிலையப் போக்குவரத்து பொலிஸ் பொறுப்பதிகாரி எச்.எம்.ஜீ ஹேரத் ஆகியோரின் நேரடி நெறிப்படுத்தலில் பொது மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதுடன், வாகனங்களில் “யுக்திய” விழிப்புணர்வு ஸ்டிக்கர்களும் பொலிசாரால் ஒட்டப்பட்டன.(04)

## சுங்க அதிகாரிகளின் தொழிற்சங்க நடவடிக்கையை காரணம் காட்டி மோசடி வர்த்தகர்கள் பொருட்களின் விலையை அதிகரிக்கத் திட்டம்!

### நியாயமற்ற செயல் என்கிறார் சுங்க அதிகாரிகள் சங்கத் தலைவர்

சுங்க அதிகாரிகளின் தொழிற்சங்க நடவடிக்கையின் காரணமாக, மருந்து வகைகள் மற்றும் அத்தியாவசிய பொருட்களை துறைமுகத்திலிருந்து விடுவிப்பதில் தாமதம் ஏற்பட்டதாகவும், இதனால் தாமத கட்டணம் செலுத்த வேண்டி ஏற்பட்டதாகவும் போலி காரணமொன்றை கூறி பொருட்களின் விலைகளை அதிகரிப்பதற்கு புறக்கோட்டையிலுள்ள சில மோசடி வர்த்தகர்கள் முயற்சிப்பதாக சுங்க அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் அமில சஞ்சீவ தெரிவித்துள்ளார்.

உண்மையில், தமது தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக அவ்வாறான

## நாளை கதிரியக்க சிகிச்சை வல்லுனர்கள் நாடு தழுவிய அடையாள வேலை நிறுத்தம்!

### மட்டக்களப்பு வைத்தியசாலைகள் பணிப்பாளரின் செயற்பாட்டிற்கு எதிர்ப்பாம்

மட்டக்களப்பு வைத்தியசாலைகள் பணிப்பாளரின் எதேச்சதிகாரமான நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவிக்குமுகமாக நாளை (27) நாடு முழுவதுமுள்ள மருத்துவமனைகளில் கதிரியக்க சிகிச்சைகளிலிருந்து விலகி அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபடவுள்ளனர் என அரச கதிரியக்க தொழில்நுட்ப வல்லுனர்களின் தொழிற்சங்கம் அறிவித்துள்ளது.

புதிய சிகிச்சை முறைகளைத் தொடங்கும் போது மருத்துவமனை பணிப்பாளர்களால் அதற்கென பணியாளர்களுக்கு கூடுதல் சேவைக் 2 ➤

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் கட்சிக்குள் கருத்து முரண்பாடு இல்லை

## முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ



ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பாக கட்சிக்குள் எந்தவொரு கருத்து வேறுபாடும் இல்லை என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். அவ்வாறு எதனையும் தான் அறியவில்லை எனவும், கருத்து வேறுபாடு உள்ளதென கூறுவதெல்லாம் வெறும் கட்டுக் கதைகள் எனவும், தமது கட்சி எந்தவொரு தேர்தலுக்கும் தயாராக உள்ளதுடன், எந்தவொரு தேர்தலையும் வெல்லும் நிலையில் உள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இம்முறை மே தின கொண்டாட்டத்தை பிரமாண்டமாக கொண்டாட கட்சி திட்டமிட்டுள்ளது எனக் கூறிய முன்னாள் ஜனாதிபதி, அரசாங்கத்தின் தற்போதைய செயற்பாடுகள் குறித்து தன்னால் திருப்தி அடைய முடியவில்லை எனவும், அரசாங்கத்தின் மீது மக்கள் குற்றம் சாட்டுகின்றனர் எனவும் தெரிவித்துள்ளார். (ரெம-91)

# பெரிய வெள்ளியை முன்னிட்டு பாதுகாப்பு ஏற்பாடுகள் அதிகரிப்பு

பெரிய வெள்ளியை முன்னிட்டு எதிர்வரும் 29ஆம் திகதி அனைத்து கிறிஸ்தவ தேவாலயங்களுக்கும் வரும் யாத்திரிகர்கள் மற்றும் அவர்களின் பயணப்பொதிகளைப் பரிசோதிக்கும்விசேட வேலைத்திட்டத்தை அமுல்படுத்துமாறு பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் அனைத்து பிரிவுகளுக்கும் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இதன்படி, சமூக பொலிஸ் குழுக்கள் மற்றும் தேவாலயங்களின் பாதிரியார்கள் மற்றும் அமைப்பாளர்களுடன் இணைந்து வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு பொலிஸ் மா அதிபர் சகல பிரிவுகளுக்கும் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

அத்துடன் அனைத்து தலைமையக பொலிஸ் பரிசோதகர்கள் மற்றும் நிலைய அதிகாரிகள் தமது பொலிஸ் எல்லைக்குட்பட்ட அனைத்து தேவாலயங்களுக்கும் நேரில் சென்று நிர்வாக அதிகாரிகளையும் சந்திக்குமாறு பொலிஸ் மா அதிபர் அறிவுறுத்தியுள்ளார்.

# மேலும் 17 வகை மருந்துகளுக்கு வைத்தியசாலைகளில் தட்டுப்பாடு

நாட்டிலுள்ள வைத்தியசாலைகளில் மேலும் 17 வகையான மருந்துகளுக்குத் தட்டுப்பாடு நிலவுவதாக சுகாதார அமைச்சின் மருத்துவ வழங்கல் பிரிவு தெரிவித்துள்ளது.

இது குறித்து சுகாதார அமைச்சின் மருத்துவ வழங்கல் பிரிவின் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் பு.விஜேசூரிய கருத்துத் தெரிவிக்கையில், நாட்டில் தொடர்ச்சியாக பயன்படுத்தப்படாத பல வகையான மருந்துகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. எனினும் தட்டுப்பாடு காணப்படும் மருந்துகளுக்கான மாற்று மருந்துகள் கிடைக்கின்றன, எனத் தெரிவித்துள்ளார்

### ரணிலை விரட்டுவதற்காகவே.....

கையில், "சிறிசேனவை வீட்டுக்கு அனுப்பிவிட்டு, செழிப்பான நாட்டை உருவாக்குவதாக கூறி கோத்தபாய அழைத்து வரப்பட்டார். அவருடைய கடந்தகால செயற்பாடுகள் நன்றாக இருந்ததால் அவர் உண்மையிலேயே செழிப்பைக் கொண்டு வருவார் என்று 69 லட்சம் மக்கள் நினைத்தார்கள். இறுதியில் நடந்தது என்ன? அவர் இரண்டு அமெரிக்கர்களின் பிடியில் இருந்தார்.

69 இலட்சம் பேரின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற அவர் நாட்டை ஆளவில்லை. மாறாக பஸில் ராஜபக்ச, ஜூலி சாங் ஆகிய இரண்டு அமெரிக்கர்களின் விருப்பங்களை நிறைவேற்றுவதிலேயே அக்கறை செலுத்தினார்.

இலங்கை வரலாற்றில் மிகப்பெரிய துரோகத்தை கோத்தபாய ராஜபக்ச செய்தார். கடந்த 30 வருடங்களாக ரணிலுக்கு எதிராக அரசியல் செய்தோம். ரணிலை விரட்டுவதற்காகவே கூட்டு எதிர்க்கட்சியை உருவாக்கினோம். ரணிலை விரட்டுவதற்காகவே கோத்தபாயவை போட்டியிடச் செய்தோம். ரணிலை விரட்டுவதற்காகவே 69 லட்சம் மக்கள் கோத்தாபாயவுக்கு வாக்களித்தனர்.

அவரால் முடியாவிட்டால், அவர் வீட்டிற்கு செல்வதில் எங்களுக்கு கவலையில்லை. ஆனால், நமது பிரதான எதிரி ரணில்தான். நாங்கள் விரட்டியடித்த அதே ரணிலிடம் அரசாங்கத்தின் தலைமைப் பொறுப்பை ஒப்படைத்தமை போன்ற ஒரு துரோகம் இலங்கை வரலாற்றில் இதற்கு முன்னர் நடந்ததில்லை, என்றார்.

மேற்படி மக்கள் சந்திப்பில் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச, இலங்கை கொம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் ஜி.வீரசிங்க, நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரத்தின தேரர், உத்தர லங்கா கூட்டமைப்பின் பிரதிச் செயலாளர் கெவிந்து குமாரதுங்க எம்.பி. ஆகியோர் உட்பட இன்னும் பலரும் உரையாற்றினர். (ரெம-86)

### பெரிய வெங்காய...

வெங்காய இறக்குமதியாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர். (ரெம-88)

### அனைத்து அரச ...

நிவாரணத் தொகையை அதிகரிக்கும் வழிகாட்டல் திட்டத்திற்கமைய ஏப்ரல் மாதம் வழங்கப்படவுள்ள 10 கிலோ அரிசி அதே மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் வழங்கப்படும் எனவும், மேலும் ஓய்வூதியதாரர்களுக்கு அதிகரிக்கப்பட்ட ரூபா 2,500 தொகையும் ஏப்ரல் மாதம் தொடக்கம் வழங்கப்படும், என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ரெம-87)

### யாழ். கீரிமலை.....

இடைமறித்தனர்.

நீண்ட நேர காணி உரிமையாளர்களின் எதிர்ப்பினை அடுத்து, காணியினை அளவீடு செய்வதற்கு தமக்கு விருப்பம் இல்லை - என காணி உரிமையாளர்கள் கடிதம் எழுதி கையொப்பமிட்டு வழங்கினர்.

அதனை அடுத்து நில அளவைத்திணைக்கள அதிகாரிகள் அங்கிருந்து திரும்பிச் சென்றனர்.

குறித்த பகுதியில் அதிகமான பொலிஸார் மற்றும் புலனாய்வுப் பிரிவினர் குவிக்கப்பட்டிருந்தனர்.

தெல்லிப்பளை பிரதேச செயலக பிரிவின்கீழ் உள்ள நகுலேஸ்வரம் (ஜே/226), காங்கேசன்துறை (ஜே/233) கிராம சேவகர் பிரிவுகளில் உள்ள ஆழ்வான்மலையடி, வேலர்காடு, புண்ணன் புதுக்காடு, பத்திராயான், புதுக்காடு, சோலை சேனாதிராயன் என அழைக்கப்படும் பகுதிகளில் 12.0399 ஹெக்டேயர் ( 29 ஏக்கர் 3 றூட் 0.20 பேர்ச் ) நிலம் அளவீடு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (01)

### நாளை கதிரியக்க...

கட்டண முறையொன்றை தயாரித்து சுகாதார அமைச்சுக்கு தெரிவிக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ள நிலையிலும், மட்டக்களப்பு வைத்தியசாலையின் பணிப்பாளரோ இவ்வாறான மேலதிக சேவை கட்டண முறை தேவையில்லை எனக் கூறி சுகாதாரத்துறை செயலாளர் மற்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் ஆகியோரின் அறிவுறுத்தல் கடிதங்களையும் பொருட்படுத்தாமல் செயற்படுவதாக மேற்படி சங்கம் குற்றம் சாட்டியுள்ளது.

பணிப்பாளரின் இந்த செயற்பாட்டிற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் நோக்கிலேயே நாடு முழுவதுமுள்ள மருத்துவமனைகளின் கதிரியக்க பிரிவுகள் நாளைய தினம் ஒரு நாள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடவுள்ளதாகவும், இது குறித்து சுகாதாரத்துறை அமைச்சர் மற்றும் அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் சங்கத்தின் பொதுச் செயலர் தர்மகீர்த்தி தெரிவித்துள்ளார். (ரெம-90)




செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# சுவாமி விபுலானந்த அடிகளாரின் சிலை சிட்னியில் வெள்ளியன்று திறப்பு விழா



(காரைதீவுச் செய்தியாளர்)

உலகின் முதல் தமிழ்ப் பேராசிரியர் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் திருவுருவச்சிலை திறப்பு விழா அவுஸ்திரேலியா சிட்னி மாநகரில், எதிர்வரும் 29 ஆம் தேதி வெள்ளியன்று இடம்பெறவுள்ளது.

சிட்னியில் வாழும் காரைதீவைச் சேர்ந்த "உதயசூரியன்" மாணவர் உதவி மையத்தின் தலைவரும், "உதயசூரியன்" பத்திரிகையின் நிர்வாக ஆசிரியருமான பிரபல பரோபகாரி நாகமணி குணரெத்தினம், "கிழக்கு உதயசூரியன்" முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாருக்கு சிலை நிறுவுகிறார்.

சுவாமிகள் பிறந்த இலங்கை திருநாட்டிற்கு வெளியே முதல் தடவையாக கடல் கடந்த நாடு ஒன்றில் சுவாமிகளின் திருவுருவச் சிலை நிறுவும் முதல் வரலாற்று நிகழ்வு இதுவாகும்.

இச்சிலை சுவாமி விபுலானந்த அடிகளாரின் 132 ஆவது ஜனன தினமான நாளை 27 ஆம் திகதிக்கு பின்வரும் 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சிட்னி மாநகரில் துர்க்கை அம்மன் ஆலய மண்டபத்தில் திறந்து வைக்கப்படவுள்ளது.

வித்தகர் சுவாமி விபுலாநந்த அடிகளார் பிறந்த காரைதீவுமண்ணிலிருந்து சுவாமி விபுலாநந்த ஞாபகார்த்த பணிமன்ற முன்னாள் தலைவரும் ஆலோசகருமான விபுலமாமணி வி.ரி.சகாதேவராஜா தலைமையிலும், மட்டக்களப்பு மண்ணிலிருந்து மட்டக்களப்பு தமிழ் சங்கத் தலைவர் வி.ரஞ்சிதமூர்த்தி தலைமையில் குழுவினர் இச்சிலை திறப்பு விழாவில் கலந்துகொள்ள ஏற்பாடாகியுள்ளது.

சிலை திறப்புவிழாவின்போது "சிட்னியில் அடிகளார் படிவமலர்" எனும் சிறப்பு மலரும் வெளியிடப்படவிருக்கிறது.

# சைவ சமய பாடப் பயிற்சிச் செயலட்டைகள் பட்டிருப்பு வலயத்தில் வழங்கிவைப்பு

இவ்வருடம் க.பொ.த சாதாரண தரப் பரீட்சை எழுதவுள்ள பட்டிருப்பு வலயத்திற்குட்பட்ட பாடசாலை மாணவர்களின் சைவ சமய பாடத்தின் அடைவு மட்டத்தை அதிகரிக்கும்நோக்கில் மேலதிக பயிற்சிக்கான செயலட்டைகள் பட்டிருப்பு வலய கல்வி அலுவலகத்தால் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டன.

வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சிறிதரனால் ஆசிரியர்களிடம் கையளிக்கும் நிகழ்வு வலயக் கல்வி அலுவலக்க் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.







# லைக்கா ஞானம் அறக்கட்டளையால் 50 புகையிரத நிலையங்களுக்கான நீர் சுத்திகரிப்புத் தொகுதி அமைப்பு



*அனைத்துலக நீர் தினத்தினை முன்னிட்டு லைக்கா ஞானம் அறக்கட்டளையினர் இலங்கை முழுவதும் அமைந்துள்ள 50 புகையிர நிலையங்களில் குடிநீர் சுத்திகரிப்புத் தொகுதியினை உருவாக்கும் நடவடிக்கையினை மேற்கொள்ளவுள்ளனர்.*

*மார்ச் 22 ஆம் திகதி அன்று கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் குறித்த விடய அறிவிப்பு மேற்கொள்ளப்பட்டது. முதல் தொகுதியாக 50 புகையிரத நிலையங்களுக்கான குடிநீர் வழங்கல் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படவுள்ளமையுடன் ஏனைய புகையிரத நிலையங்களுக்கும் விஸ்தரிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.*

*லைக்கா ஞானம் அறக்கட்டளையின் நிறுவுநர் அல்லிராஜா சுபாஸ்கரன் அவர்களின் வழிப்படுத்தலில் குறித்த குடிநீர் வழங்கல் செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.*

*லைக்கா ஞானம் அறக்கட்டளையினூடாக மாத்தறை பனவில கிராமத்துல் நூறுக்கு மேற்பட்ட மக்களுக்கான குடிநீர் பெற்றுக்கொள்ளுவதற்கான குடிநீர் இணைப்பும் வழங்கப்பட்டுள்ளது.*

*அத்துடன் அனைத்துலக நீர் தினத்தினை முன்னிட்டு லைக்கா ஞானம் அறக்கட்டளையின் 25 மாவட்ட சமுதாயக் கூடத்தில் பாடசாலை மாணவர்களுக்கான சித்திரத" திருவிழாவும் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.*

# பாக்கு நீரிணையை நீந்திக் கடந்து உலக சாதனை ஹரிகரன் தன்வந்துக்கு பணப்பரிசும் கௌரவிப்பும்



(ஹஸ்பர் ஏ.எச்)

கடந்த 5 ஆம் திகதி பாக்கு நீரிணையை நீந்திக் கடந்து உலக சாதனை படைத்த திருகோணமலை இந்துக் கல்லூரியில் ஒன்பதாம் வகுப்புப் படிக்கும் ஹரிகரன் தன்வந்தைக் கனடா திருகோணமலை நலன்புரிச் சங்கம் ஓர் இலட்ச ரூபாய் பரிசுத் தொகையும் வெற்றிக் கிண்ணமும் வழங்கிக் கௌரவித்தது.

கனடா திருகோணமலை நலன்புரிச் சங்கத் தலைவர் க.இரகுநாதனும், அதன் காப்பாளரும் திருகோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கத்தின் தலைவருமாகிய சண்முகம் குகதாசனும் இவற்றை வழங்கினர்.


கடந்த வாரம் திருக்கோணமலை இந்துக்கல்லூரி மாணவர் ஒன்றுகூடலின் பொழுது இந்தக் கௌரவிப்பு நிகழ்ச்சி நடபெற்றது.

கல்லூரி அதிபர், துணை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், தன்வந்தின் பெற்றோர் உள்ளடக்கிய பலரும் இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வின் பொழுது உரையாற்றிய சண்முகம் குகதாசன், இச்சாதனை புரிந்த மாணவன் நமது மாவட்டத்திற்கு பெருமை சேர்திருக்கிறார். அவர் மென்மேலும் முன்னேறி ஒலிம்பிக் வரை செல்ல வேண்டும், என வாழ்த்தினார்.

# கர்ப்பப்பை புற்று நோய்க்கான 'ஹியூமன் பபிலோமா' தடுப்பூசி இல்லாததால் பெண் பிள்ளைகள் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளனர்!

## தாமதமானால் நிலைமை மோசமாகும் என மருத்துவர் சங்கம் எச்சரிக்கை




கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோயைத் தடுக்கும் நோக்கில் பெண் பிள்ளைகளுக்கு வழங்கப்படும் 'ஹியூமன் பபிலோமா' வைரஸ் தடுப்பூசி நாட்டில் இல்லாததால், நோய்த்தடுப்புத் திட்டம் முற்றாக ஸ்தம்பிதமடைந்துள்ளதாக மருத்துவ மற்றும் சிவில் உரிமைகள் மருத்துவர்கள் சங்கங்களின் அமைப்பு தெரிவித்துள்ளது.

பிற்காலத்தில் எதிர்காலங்களில் பெண்களுக்கு ஏற்படக்கூடிய கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோயின் அபாயத்தைக் குறைக்க இந்த தடுப்பூசியை போடுவது மிகவும் அவசியம், பொதுவாக ஆறாம்

வகுப்பில் கல்வி கற்கும் பெண் பிள்ளைகளுக்கு இந்த தடுப்பூசி போடப்படுகிறது. எனவே,கடந்த வருடம் இந்த தடுப்பூசியை ஏற்ற நடவடிக்கை எடுக்காததால், அடுத்த ஆண்டுக்குள் மேற்படி தடுப்பூசியை பெற வேண்டியர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதன் மூலம் அது மேலும் சிக்கல் நிலையை தோற்றுவிக்கும் எனவும் மேற்படி அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

'ஹியூமன் பபிலோமா' தடுப்பூசியானது, தனிநபரின் வயது மற்றும் நோயெதிர்ப்பு நிலையைப் பொறுத்து இரண்டு அல்லது மூன்று தடவைகள் (டோஸ்கள்) வழங்கப்படுவதாகவும், ஒன்பது முதல் பதின்மூன்று வயது வரையிலான பெண் பிள்ளைகளுக்கு இந்த தடுப்பூசிகளை பரிந்துரைப்பதன் மூலம் குறைந்தது 5 முதல் 10 வருடங்கள் வரை கர்ப்பப்பை புற்று நோயிலிருந்து பாதுகாப்பு கிடைக்கப் பெறுகின்றது என மேற்படி மருத்துவர் சங்க அமைப்பின் தலைவர் மருத்துவர் சமல் சஞ்சீவ குறிப்பிட்டுள்ளார்.

கர்ப்பப்பை வாய்ப்புற்று நோய் 70 வீதம், குத புற்றுநோய் 80 வீதம் , யோனி புற்றுநோய் வீதம், யோனி பாதை புற்றுநோய் வீதம் என குறித்த நோய்கள் ஏற்படுவதை தடுக்கும் வல்லமையை இந்த தடுப்பூசி கொண்டுள்ளது எனவும் மருத்துவர் மேலும் தெரிவித்துள்ளார்.

'ஹியூமன் பபிலோமா' வைரஸ் தடுப்பூசியை வழங்குவதில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளை கூடிய விரைவில் தீர்த்து வைத்து தடுப்பூசி வழங்கல் வேலை திட்டத்தை செயல்படுத்துவதில் சுகாதார அமைச்சின் செயலாளர் கவனம் செலுத்த வேண்டும் எனவும் மருத்துவர்கள் சங்கங்களின் அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ரெம-84)

# மின்சார கட்டணத்தை குறைத்தமை போலவே நீர் கட்டணமும் குறைக்கப்படல் வேண்டும்!

## தேசிய சிவில் அமைப்பு முன்னணி கோரிக்கை




மின்சாரக் கட்டணக் குறைப்புடன் ஒப்பிடும் போது நீர் கட்டணத்தையும் உடனடியாகக் குறைக்க அரசாங்கம் செயற்பட வேண்டுமென தேசிய சிவில் அமைப்பு முன்னணியின் பொதுச் செயலாளர் சஞ்சீவ தம்மிக்க தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே இதனை அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், குறைக்கப்பட்ட மின் கட்டணத்தை போன்றதான பலனை குடிநீர் பாவனையாளர்களும் பெற வேண்டும். இதற்கான நடவடிக்கையை உடனடியாக மேற்கொள்ளுமாறு அமைச்சர் ஜீவன் தொண்டமானிடம் கேட்டுக்கொள்கின்றோம்.

இந்த அனுகூலம் தோட்டத்தின் குறைந்த வருமானம் பெறும் மக்கள் மற்றும் அனைத்து குடிநீர் பாவனையாளர்களுக்கும் வழங்கப்பட வேண்டும்.

நீர் கட்டணம் தொடர்பான விலை சூத்திரம் வழங்கப்படும் என அரசு கூறிய போதிலும் அது இதுவரை வழங்கப்படவில்லை. இன்று குடிநீர் திட்டங்களுக்கு பணம் ஒதுக்கப்படுவதில்லை,

நீர் வழங்கல் திட்டங்களுக்கான குழாய்கள் இல்லை, அதற்கான பணம் இல்லை என கூறப்படுகின்றது. ஆனால், சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணைக்கு மாத்திரம் நான்கு கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

அன்று "அனைவருக்கும் குடிநீர்" என்று கூறிய அரசின் செயற்பாடு இதுதானா? எனவே, இவ்வாறான வேலைத்திட்டங்களை உடனடியாக ஆரம்பிக்குமாறு அமைச்சரைக் கேட்டுக் கொள்கின்றோம்" என்றார்.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் தேசிய சிவில் அமைப்பு முன்னணியின் தலைவர் பிரியந்த திலகரத்னவும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ரெம-85)

# முதல் டெஸ்ட்டில் இலங்கை வெற்றி!



இலங்கை அணிக்கும் பங்களாதேஷ் அணிக்கும் இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டியில் 4ஆவது நாளிலேயே இலங்கை அணி 328 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றுள்ளது

இலங்கை அணி முதல் இன்னிங்சில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 280 ஓட்டங்களையும் 2ஆவதில் 418 ஓட்டங்களையும் பெற்றது.

இரண்டு இன்னிங்ஸ்களிலும் தனஞ்சய டி சில்வா, கமிந்து மெண்டிஸ் இருவரும் சதமடித்தமை குறிப்பிடத்தக்கது.

பங்களாதேஷ் அணி தனது முதல் இன்னிங்சில் அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 188 ஓட்டங்களைப் பெற்றது. அதன்படி 2 ஆவது இன்னிங்சில் 510 ஓட்டங்கள் பின்னிலையில்

விளையாட ஆரம்பிந்த அந்த அணி, 182 ஓட்டங்களுக்கு ஆட்டமிழக்க, இலங்கை அணிக்கு 328 ஓட்டங்களால் வெற்றி கிடைத்தது.

இந்த வெற்றியின் மூலம் இரண்டு போட்டிகள் கொண்ட தொடரில் 1-0 என்ற கணக்கில் இலங்கை அணி முன்னிலை பெற்றுள்ளது.

# வவுனியா பாலமோட்டையில் செத்தல் மிளகாய் பதப்படுத்தல் நிலையம் திறந்துவைப்பு



(அஸ்ஹர் இப்றாஹிம்)

விவசாய பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் கீழ் 356 மில்லியன் ரூபாய் செலவில் விவசாய நவீன மயமாக்கல் வேலைத் திட்டத்தின் மூலம் வவுனியா மாவட்டத்தின் பாலமோட்டை பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள செத்தல் மிளகாய் பதப்படுத்தல் மற்றும் பொதியிடல் நிலையமானது விவசாய பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீரவால் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் வன்ன மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ராஜாங்க அமைச்சருமான காதர் மஸ்தான் உட்பட அதிகாரிகள் மற்றும் பிரதேச மக்கள் கலந்து கொண்டனர்.

# கச்சா எண்ணெயின் விலை உயர்வு




காசா பகுதி மற்றும்உக்ரைன் - ரஷ்யா இடையே நிலவும் மோதல்களின் விளைவாக உலக சந்தையில் கச்சா எண்ணெய் விலை தொடர்ந்து அதிகரித்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி இன்று பிரன்ட் கச்சா எண்ணெய் பரல் ஒன்று 85.82 டொலர்களாகவும், அமெரிக்க டிபிள்யு ரி ஐ கச்சா எண்ணெய்யின் விலை 81.4 டொலர்களாகவும் பதிவாகியுள்ளது.

இதேவேளை கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதத்துக்குப் பிறகு கச்சா எண்ணெயின் விலை இவ்வாறு வேகமாக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# புத்தாண்டுக்கு 'ஷொப்பிங்' வரும் மக்களுக்கு பொலிஸ் பாதுகாப்பு

புத்தாண்டு காலத்துக்கு கொழும்பு நகரில் பொருட்கள் வாங்க வரும் மக்களின் பாதுகாப்புக்காக

200க்கும்மேற்பட்ட பொலிஸ்உத்தியோகத்தர்கள் சீருடையிலும் மற்றும் சிவில் உடையிலும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக கொழும்பு மத்திய பிரிவுக்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் லலித் லீலாரத்ன தெரிவித்துள்ளார். (ரெம-83)

# சர்வதேச நீர் தினத்தை முன்னிட்டு விசேட பூசை பொங்கல் நிகழ்வு



(ஹஸ்பர் ஏ.எச்)

சர்வதேச நீர் தினமான கடந்த 22 ஆம் திகதி தம்பலகாமம் பிரதேச செயலகப் பகுதியின் விவசாயிகளால் விசேட பூசை நிகழ்வொன்று வெம்பு பகுதி வயல் நிலத்தில் மேற்கொள்ளப்பட்டது.

கடும் மழையுடனான கால நிலையில் மேற்கொள்ளப்பட்ட குறித்த நிகழ்வினை தம்பலகாமம் பிரதேச விவசாய சம்மேளனங்கள், பிரதேச செயலகம், கமநல அபிவிருத்தி திணைக்களம், நீர்ப்பாசன திணைக்களம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்திருந்தன.

இதன்போது குறித்த வயல் வெளிக்கு அருகாமையில் உள்ள பிச்சைவெளி ஆற்று ஓடையில் பூசை நடத்தப்பட்டு தீர்த்தம் விடும் நிகழ்வு இடம்பெற்றது.

மிக நீண்ட நாட்களின் பின் கனமழை பெய்ததால் விவசாயிகள் மகிழ்ச்சி வெளியிட்டனர்.

இந்த நிகழ்வில் தம்பலகாமம் பிரதேச செயலாளர் திருமதி ஜெ.ஸ்ரீபதி, நீர்ப்பாசன திணைக்களத்தின் கந்தளாய் பிரதேச பொறியியலாளர் எஸ்.ஏ.சி.எஸ். சுரவீர உட்பட கமநல சேவைகள் திணைக்கள உத்தியோகத்தர்கள், விவசாய சம்மேளனங்களின் உறுப்பினர்கள், விவசாயிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

# சம்மாந்துறை வைத்தியசாலைக்கு சீன நிதியில் கட்டடத் தொகுதி



(அஸ்லம் எஸ்.மௌலானா)

சுகாதார அமைச்சின் செயலாளர் டொக்டர் பாலித மஹிபால, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டொக்டர் அசேல குணவர்த்தன உள்ளிட்ட உயர்மட்ட குழுவினர், நாடாளுமன்ற உறுப்பினர் பைசால் காசிமின் அழைப்பின் பேரில் சனிக்கிழமை (23) சம்மாந்துறை ஆதார வைத்தியசாலைக்கு கள விஜயமொன்றை மேற்கொண்டனர்.

இந்த வைத்தியசாலையில் சீன அரசின் நிதியுதவியுடன் நிர்மாணிக்கப்பட்டு, முடிவுறும் தறுவாயிலுள்ள மூன்று மாடிக் கட்டடத் தொகுதியை இவர்கள் பார்வையிட்டதுடன் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் எதிர்கால அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பிலும் கலந்துரையாடினர். இந்நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் சகீலா இஸ்ஸதீன், வைத்திய அத்தியட்சகர் அஸாத் ஹனிபா, வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவினர், விசேட வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள் மற்றும் ஊழியர்களும் பங்கேற்றிருந்தனர்.




# சர்வதேச வனங்கள் தினம் காத்தான்குடியில் அனுஷ்டிப்பு



(எம்.எம்.றம்ஸீன்)

சர்வதேச வனங்கள் தினத்தினை கோகிறீன் சூழலியல் நிறுவனம் காத்தான்குடியில் அனுஷ்டித்தது.

இத்தினம்தொடர்பாக இம்முறை காத்தான்குடி ஜாமிஉல்-ழாபிரீன் மையவாடியில் மரநடுகை, காத்தான்குடி மத்திய கல்லூரியின் வெளிப்புறச் சுற்றாடலில் மரநடுகை, பூநொச்சிமுனை கடற்கரையோரங்களில் மரநடுகை ஆகிய நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன.

கோகிறீன் நிறுவனத்தின் உபதலைவர் எம்.எல்.எம்.லாபிர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்விற்கு, காத்தான்குடி பிரதேசத்திற்குப் பொறுப்பான மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் அதிகாரி திருமதி மலர்விழி பாஸ்கரன், மட்டக்களப்பு வன பரிபாலன திணைக்கள அதிகாரி சதாசிவம், காத்தான்குடி பிரதேசத்திற்குப் பொறுப்பான கரையோரம் பேணல் திணைக்கள அதிகாரி திருமதி பாஸ்கரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்விற்கான ஏற்பாடுகளை கோகிறீன் நிறுவனத்தின் தலைவர் எம்.வை.எம்.ஷரீப், செயலாளர் எம்.மாஹிர், மற்றும் எம்.றமீஸ் ஆகியோர் மேற்கொண்டிருந்தனர்.

# கல்முனை சன் பிறைட் கழகத்தின் வருடாந்த இப்தார் நிகழ்வு



(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்முனை சன் பிறைட் கழகத்தின் வருடாந்த இப்தார் நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்வு கல்முனை இக்பால் சனசமூக நிலையத்தில் துஆப் பிராத்தனையுடன் ஆரம்பமானது.

இந்நிகழ்வில் மாநகர சபை உறுப்பினர்கள், உலமாக்கள், கழக அங்கத்தவர்கள் உட்பட பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

# நவீன கல்வி முறையை உருவாக்குவதற்கு முயற்சி! பாடசாலைக் கல்வி – பரீட்சை முறையில் மாற்றம்

## ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவிப்பு



தற்போது நாட்டில் நவீன கல்வி முறையை உருவாக்குவதற்கு நாங்கள் முயற்சி செய்து வருகிறோம். 2024 ஆம் ஆண்டுக்கு மாத்திரமன்றி 2030 ஆம் ஆண்டுக்கும் உகந்த கல்வி முறையை உருவாக்க வேண்டும். அந்தப் பணிகளை இப்போது செய்து வருகிறோம். ஆசிரியர்களுக்கு பயிற்சி அளித்தல், நவீன தொழிநுட்ப அறிவை வழங்குதல் போன்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன, என்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

நாரஹேன்பிட்டி சுஜாதா மகளிர் கல்லூரியில் நேற்று (25) இடம்பெற்ற “2024 பாடசாலை உணவுத் திட்டம்” ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்ட ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இவ்வாறு குறிப்பிட்டார்.


மேலும், ஒவ்வொரு பாடசாலையிலும் செயற்கை நுண்ணறிவு திட்டத்தை செயல்படுத்த திட்டமிட்டுள்ளோம். முதலில் பாடசாலைகளில் ஏஐ சங்கங்கள் தொடங்கப்பட வேண்டும். மேலும், தேசிய ஏஐ மையம் சட்டப்படி நிறுவப்பட உள்ளது. இந்த ஆராய்ச்சி மற்றும் கல்வி நடவடிக்கைகளுக்காக அரசாங்கம் ஆயிரம் மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது என்பதைக் கூற வேண்டும்.

அதன்படி, அடுத்த சில ஆண்டுகளில், செயற்கை நுண்ணறிவுத் திட்டத்தை ஆரம்பப் பாடசாலைகள் மட்டுமின்றி, உயர்கல்வி கற்பிக்கப்படும் அனைத்துப் பாடசாலைகளிலும் அறிமுகப்படுத்த உள்ளது.

நவீன தொழிநுட்பத்துடன் நாம் முன்னேற வேண்டும். அந்த தொழிநுட்ப அறிவை பிள்ளைகளுக்கு கொடுக்க வேண்டும். அதன்படி, பாடசாலைக் கல்வி மற்றும் பரீட்சை முறையை மாற்றியமைப்பது குறித்து கவனம் செலுத்தியுள்ளோம்.

இந்த நவீன தொழிநுட்ப அறிவோடு பிள்ளைகளின் ஆங்கில மொழி அறிவையும் வளர்க்க வேண்டும். அதற்கான திட்டங்களையும் வகுத்துள்ளோம், என்றும் ஜனாதிபதி தெரிவித்தார். (04)

# பறவை கூடுகளுடன் பாடசாலைக்கு வந்த மாணவர்கள்! ஆசிரியர் அனுப்பிய தகவலால் நடந்த கொடுமை



தம்புத்தேகம கல்வி வலயத்துக்குட்பட்ட ஆரம்பப் பாடசாலை ஆசிரியர் ஒருவர் பாடசாலை மாணவர்களுக்கு பறவைக்கூடு ஒன்றைக் கொண்டு வருமாறு அனுப்பிய வட்ஸ்அப் தகவலுக்கு அமைய மறுநாள் நாற்பது மாணவர்கள் பறவைக் கூடுகளுடன் வகுப்புக்கு வந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

பறவைக் கூடு கொண்டு வரச் சொல்லி சுமார் அறுபது மாணவர்களுக்கு வட்ஸ்அப் மூலம் ஆசிரியர் செய்தி அனுப்பியுள்ளார்.

இதனையடுத்து, சுமார் நாற்பது மாணவர்கள் பறவைக்கூடுகளுடன் பாடசாலைக்கு வந்துள்ளனர்.

பறவைக்கூட்டுடன் குழந்தைகளை வகுப்பறைக்கு அழைத்து வந்த பெற்றோர் வகுப்பறையில் ஏராளமான பறவைக்கூடுகளைக் கண்டு ஆசிரியரின் செயலுக்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

இயற்கைச் சூழலில் பறவைக் கூடுகளைப் பற்றி குழந்தைகளுக்குக் கற்றுக்கொடுப்பதற்குப் பதிலாக இவ்வாறு பறவைக் கூடுகளை அழிக்கக் கற்றுக் கொடுப்பது குறித்து பெற்றோர் கவலை தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் தம்புத்தேகம பிரதேச செயலாளருக்கு பெற்றோர்கள் அறிவித்துள்ளனர். தம்புத்தேகம கல்வி வலய ஆரம்பக் கல்வி உதவிப் பணிப்பாளர் உபாலிசேன இது தொடர்பில் ஆராயவுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, வனவிலங்கு மற்றும் தாவரங்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 31ஆவது பிரிவின்படி பறவைக் கூடுகளை உடைப்பது, அகற்றுவது மற்றும் அழிப்பது சட்டப்படி குற்றமாகும் என சிரேஷ்ட சுற்றாடல் சட்டத்தரணி கலாநிதி ஜகத் குணவர்தன குறிப்பிட்டுள்ளார்.

அந்தச் சட்டத்தின்படி பறவைக் கூடுகளும் பாதுகாக்கப்பட வேண்டியவை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (04)

## கல்முனை வலயக் கல்வி அலுவலகத்தின் வருடாந்த இப்தார் நிகழ்வு



(நூருல் ஹுதா உமர்)

கல்முனை வலயக் கல்வி அலுவலத்தின் வருடாந்த இப்தார் நிகழ்வு நேற்ற (25)வலயக் கல்வி அலுவலகத்தில் இடம்பெற்றது.

வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.ச/ஹதுல் நஜீம் தலைமையில் நடைபெற்ற இந்த இப்தார் நிகழ்வில் அரச நிறுவனங்களின் பிரதானிகள், ஓய்வு பெற்ற கல்வி அதிகாரிகள், வலயக் கல்வி பணிமனை கணக்காளர், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், கல்முனை கல்வி வலய அதிபர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், அலுவலக உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

ஜனாதிபதியினால் முன்னெடுக்கப்படும் இஸ்ரேல் பலஸ்தீன் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட காஸா மக்களுக்கு உதவும் காஸா நிதியத்திற்கு இந்நிகழ்வில் வைத்து 3 இலட்சம் ரூபா நிதியும் கையளிக்கப்பட்டது.






## Women Plus Bazaar 2024
## கொழும்பில் கண்காட்சி



இலங்கைக்கான எகிப்து தூதரகத்தால் கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்ட றுழஅநெ °டரளடீயணயயச 2024 கண்காட்சியின் கௌரவ விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் கலந்து சிறப்பித்தார்.

கொழும்பு காலிமுகத்திடலில் அமைந்துள்ள ழுநெ புயடடந குயஉந சிறப்பு அங்காடி தொகுதியில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த கண்காட்சிக் கூடத்தை, ஏனைய அதிதிகளுடன் இணைந்து வடக்கு மாகாண ஆளுநர் திறந்து வைத்தார். பின்னர் கண்காட்சிக் கூடத்தையும் பார்வையிட்டார்.

நாட்டிலுள்ள ஒன்பது மாகாணங்களில் வசிக்கும் நூற்றுக்கும் மேற்பட்ட கைவினைக் கலைஞர்களின் உற்பத்திகளை மேம்படுத்தும் நோக்கில் இந்தக் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பல்வேறு மாவட்டங்களிலும் வசிக்கும் குறைந்த வருமானம் பெறும் பெண் தொழில் முனைவோரை இலக்காகக் கொண்டு இந்தக்கண்காட்சி ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளது.

## பாடசாலையில் மடிக்கணினிகளை திருடிய மாணவர்கள் இருவர் கைது!

பேருவளைப் பகுதியில் உள்ள பாடசாலையொன்றின் ஸ்மார்ட் வகுப்பறையை உடைத்து 12 மடிக் கணினிகளைத்திருடிய அதே பாடசாலையைச் சேர்ந்த இரு மாணவர்கள் உட்பட ஐவர் நேற்று (25) கைது செய்யப்பட்டுள்ளதாக பேருவளை பொலிஸார் தெரிவித்தனர்.

அடுத்த வருடம் சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள 16 வயதுடைய மாணவர்கள் இருவரும் பாணந்துறை மற்றும் பாதுக்க பிரதேசங்களில் வசிக்கும் மூவரும் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த பெப்ரவரி மாதம் போயா தினத்தன்று மடிக்கணினிகள் திருடப்பட்டுள்ளதாக முறைப்பாடு கிடைத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பாடசாலை மாணவர்கள் இருவர் மடிக்கணினிகளை விற்பனை செய்ய முயற்சிப்பதாகக் கிடைத்த தகவலை அடுத்து, முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் பின்னர் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், திருடப்பட்ட 12 மடிக்கணினிகள் பாதுக்க பிரதேசத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

(04)

JRIDE
BEYOND THE ROAD

Safety and comfort are our concern

# ஜேரைட்
# JRIDE
## TAXI APP FROM JAFFNA
இலங்கை முழுவதும் | Islandwide

DOWNLOAD PASSENGER APP.

ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா?
கவலையினை விடுங்கள்.

**நாங்கள் தயாராகிவிட்டோம்!**

யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)

jride
JRide - Beyond the Road
Speed IT net • Travel & Local
Install
JRide Driver: Drive & Deliver
Speed IT net • Travel & Local
Install

இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்கலாம்!

YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE

GET IT ON Google Play
Download on the App Store

**வாகன உரிமையாளர்களே ஓட்டுனர்களே!**
உங்கள் தனிப்பட்ட மற்றும் வாடகை வாகனங்களை பயன்படுத்தி உங்கள் வருமானத்தை அதிகரிக்க ஒரு தீர்வு!

இதுவரை பதிவு செய்யாதவர்கள் JRide Driver செயலியில் இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் சேவையை தொடங்கலாம்!

DOWNLOAD DRIVER APP.

YOU CAN EASILY REGISTER & ADD YOUR VEHICLE

GET IT ON Google Play
Download on the App Store

## SCHEDULED BOOKING
New Feature
புதிய வசதி

நீண்ட தூர பயணத்திற்கு வாகனத்தினை முன்பதாகவே புக்செய்து வைக்க விரும்புகின்றீர்களா?

**விமான நிலையத்திற்கு / விமான நிலையத்தில் இருந்து வாகனம் தேவையா?**

எமக்கு அழையுங்கள்; தொலைபேசி ஊடாகவோ; WhatsApp மூலமாகவோ தொடர்பு கொள்ளவும்.

**HOTLINE : 706563213 / 703563213**

## JRIDE TAXI APP
## SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்

+94 703 563213
www.jride.lk

மகிழ்ச்சியான பயணம் திருப்தியான கட்டணம்!


இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 26.03.2024 இல் வெளியிடப்பெற்றது.